**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081630

1. District : மாவட்டம் மதுரை — PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு — Year ஆண்டு 2022 — FIR No. மு.த.அ. எண் 05/22 — Date நாள் 29.07.2022

2. (i) Act சட்டம்: — Sections பிரிவுகள்: U/S. 7 of PC Act 1988
   (ii) Act சட்டம்: ஊ.த.க. சட்டம் 1988 — Sections பிரிவுகள்: as amended by the
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: P C (amendment) Act 2018.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை 1) 08.07.2022 சுமார் 11.15 hrs
   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை 2) 11.07.2022 காலை 10.45 hrs 3) 27.07.2022 மாலை 4.45 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.07.2022 — Time : நேரம் 08.30 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29.07.2022 — Time : நேரம் 09.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 3 கி.மீ தென் கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி தெற்கு தாலுகா அலுவலகம், மதுரை.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் மு. ரமேஷ் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முத்தையா
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 52/2022 — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation தொழில் வெள்ளி கொலுசு பாலிஷ் மற்றும் விற்பனை — (g) Address : முகவரி எண்.5, விக்னேஷ் அவன்யூ, அருணாச்சலபுரம் 2வது சந்து, இஸ்மாயில்புரம், 12வது தெரு, மதுரை-9

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) திரு. முத்துபாண்டி, நகர சார் ஆய்வாளர் நில அளவைப் பிரிவு, வட்டாட்சியர் அலுவலகம், மதுரை தெற்கு தாலுகா, மதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்படுகிறது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 29.07.22. [signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29.07.2022 at 09.40 hrs

Name: பெயர் த. கிரிபுகலா
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண்
வ.த.க. பிரிவு,
மதுரை (29.07.2022)

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 29.07.2022-ம் தேதி காலை சுமார் 8.30 மணிக்கு நான் (T. சூரியகலா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை) மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியிலிருந்த போது, மதுரை இஸ்மாயில்புரம் 12 -வது தெரு, அருணாச்சலபுரம் 2 -வது சந்து, விக்னேஷ் அவன்யூ-ல் குடியிருந்து வரும் முத்தையா மகன் ரமேஷ் என்பவர் ஆஜராகி எழுத்துப்பூர்வமான புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் M.ரமேஷ், S/o. முத்தையா, No.5, விக்னேஷ் அவன்யூ, அருணாச்சலபுரம் 2 -வது சந்து, இஸ்மாயில்புரம் 12 -வது தெரு, மதுரை-9. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. அய்யா, நான் கடந்த 20 வருடமாக பழைய வெள்ளி கொலுசு பாலீஸ் செய்து கொடுப்பது மற்றும் வெள்ளி கொலுசுகள் விற்பனை செய்து கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன். நான் எனது மனைவி சுபா பெயரில் மதுரை தெற்கு மதுரை மாநகர் வார்டு 1 நகர சர்வே எண். 796/1, 1A,1B யில் 940 சதுரடி அளவுள்ள வீட்டடி மனையை திரு.கே.ஜமால் முகமது என்பவரிடமிருந்து 02.05.2007ம் தேதியன்று ஆவண எண். 4128/2007-ன் படி மதுரை மஹால் பத்திர பதிவு அலுவலகத்தில் உள்ள இணை எண் 2 சார்-பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கிரையம் பெற்றேன். நான் வாங்கும் போது மேற்படி இடத்தில் சிறிய ஓட்டு வீடு இருந்தது. பின்னர் அந்த இடத்திற்கு 16.05.2008-ஆம் தேதி ஆர்.டி.ஆர் எண். 1014/2008-ன் படி உட்பிரிவு செய்து எனது மனைவி பெயரில் நகர நிலை ஆணை எண் 17/2 (பட்டா) என வழங்கப்பட்டது. பின்னர் அந்த ஆணையினை வைத்து வீடு கட்டுவதற்கு கடந்த 2009-ஆம் ஆண்டு வங்கி மூலம் வீட்டு கடன் பெற்றேன். அதன் பின்னர் நான்கு முறை அந்த வீட்டின் மீது அடமான கடன் பெற்றுள்ளேன். அவ்வாறு கடன் பெறும் போது ஒவ்வொரு முறையும் மேற்படி இடத்திற்கான வில்லங்க சான்று, நகர நிலை ஆணை எண் (பட்டா) 17/2, வரைபடம், நகர சர்வே பதிவேடு மற்றும் Legal Opinion பெற்று வங்கியில் கொடுத்துள்ளேன். கடந்த பிப்ரவரி மாதம் மதுரை ராஜா முத்தையா மன்றத்திற்கு எதிரே உள்ள RACPC, SBI வங்கியில் அடமான கடன் கேட்டபோது, மீண்டும் MOD பதிய வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு Legal Opinion பெறச் சென்றபோது, எனது மனைவி பெயரிலுள்ள இடத்திற்கான வில்லங்க சான்று, நகர நிலை ஆணை எண் (பட்டா) 17/2, வரைபடம், Online Certificate of

Extract from the Town Survey Land Register வேண்டும் என்று கேட்டதால் நான் இ சேவை மையத்தில் பார்த்த போது எனது மனைவிக்கு வழங்கப்பட்ட நகர நிலை ஆணை எண். 17/2 காந்தி மனைவி செல்வி என்பவர் பெயரில் இருந்தது. இது சம்பந்தமாக 17.06.2022-ஆம் தேதி மதுரை தெற்கு தாலுகா அலுவலகத்தில் நில அளவை பிரிவில் உள்ள நகர சார்-ஆய்வாளர் திரு.முத்துப்பாண்டி அவர்களிடம் அந்த விபரத்தை கூறினேன். அவர் உங்களது நகர நிலை ஆணை எண் 17/2 கிராம நிர்வாக ஆவணங்களில் பதிவாகவில்லை. ஆகையால் நீங்கள் புதிதாக மனு செய்ய வேண்டும் என்று கூறினார். பின்னர் நான் எனக்கு அதே நகர நிலை ஆணை எண் தான் வேண்டும் என்று கூறியவுடன், என்னை மதுரை தெற்கு வட்டாட்சியர் அவர்களை பார்க்க அறிவுறுத்தினார். நான் வட்டாட்சியரை நேரில் சந்தித்து கேட்ட போது அவரும் சர்வேயர் முத்துப்பாண்டி சொன்னது போல் புதிதாக மனு செய்ய வேண்டும் என்று கூறினார். நானும் அன்றைய தினமே எனது மனைவிக்கு வழங்கிய நகர நிலை ஆணை எண் 17/2 -யை கணினியில் பதிவேற்றம் செய்தவற்காக மனுவை எழுதி தாசில்தார் அவர்களின் அலுவலக பெட்டியில் போட்டேன். அம்மனு போட்ட விபரத்தை சர்வேயர் திரு. முத்துப்பாண்டியிடம் கூறவே, அவர் புதிய பட்டா தான் வழங்க முடியும், ஆகையால், இ சேவை மூலம் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். அதன்படி அன்றைய தினமே இ சேவை மையத்தில் பட்டா உட்பிரிவு பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்தேன். அதன் பின்னர் 08.07.2022-ஆம் தேதி நான் வெளியூர் சென்றிருந்த சமயத்தில், அன்று காலை சுமார் 11.15 மணிக்கு நகர சார்-ஆய்வாளர் திரு.முத்துப்பாண்டி அவர்கள் எனது வீட்டை அளந்து விட்டு, எனது மனைவி சுபாவிடம் தனது அலுவலக செலவிற்கு ரூபாய் ஏழாயிரம் கொடுக்க வேண்டும் என்று கூறியும் என்னை நேரில் வந்து அவரை சந்திக்கச் சொல்லியும் சென்று விட்டார். அதன்படி எனது மனைவி கூறியதன் பெயரில் நான் 11.07.2022-ஆம் தேதி காலை சுமார் 10.45 மணியளவில் திரு.முத்துப்பாண்டி அவர்களை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்த போது, உங்களுக்கு நான் பட்டா புதியதாக உங்களது மனைவி பெயரில் கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என்று கூறியும், அவர் தனது அலுவலக செலவிற்காக ரூபாய் ஏழாயிரம் ஆகும் என்று கேட்டார். நான் முத்துப்பாண்டியிடம் தற்போது தொழில் மிகவும் மோசமாக உள்ளது, அவ்வளவு பணம் என்னால் கொடுக்க இயலாது என்று கூறினேன். அதற்கு திரு.முத்துப்பாண்டி அவர்கள் அப்படி என்றால் ரூபாய் இரண்டாயிரத்தை குறைத்து, ஐயாயிரமாவது கொடுத்தால் தான் உங்களுக்கு பட்டா கிடைக்க ஏற்பாடு

செய்வேன் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். அவர் கேட்ட பணத்தை என்னால் புரட்ட முடியவில்லை. மேலும், எனது சொந்த வேலையின் காரணமாக நான் திரும்ப மதுரை தெற்கு தாலுகா அலுவலகம் சென்று சர்வேயர் திரு. முத்துப்பாண்டியை பார்க்கவில்லை. பின்னர் 27.07.2022 -ஆம் தேதி மதியம் சுமார் 2 மணியளவில் சர்வேயர் முத்துப்பாண்டி அவர்கள் 7904327939 என்ற மொபைல் எண்ணிலிருந்து எனது 9842175802 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொண்டு உங்களுக்கு பழைய பட்டா நம்பருக்கு பதிலாக புதிய பட்டா எண்தான் கொடுக்க முடியும் எனவே தாசில்தார் உங்களிடம் ஸ்டேட்மெண்ட் வாங்கச் சொல்லியிருக்கிறார் என்று கூறினார். உடனே நான் பேங்கில் இதுபற்றி கேட்டுவிட்டு வருகிறேன் என்று கூறினேன். அதற்கு அவர் நீங்கள் ஸ்டேட்மெண்ட் கொடுக்கவில்லை என்றால் பைலை Close செய்துவிடுவேன் என்று கூறி போனை வைத்து விட்டார். சிறிது நேரம் கழித்து நான் எனது போனிலிருந்து சர்வேயரை தொடர்பு கொண்டு எத்தனை மணி வரை அலுவலகத்தில் இருப்பீர்கள் என்று கேட்டேன். அதற்கு சர்வேயர் முத்துப்பாண்டி, தாசில்தார் உங்களது Back file எடுக்க சொல்லியிருக்கிறார். உங்களது பட்டா எண் 17/2 வேறு நபருக்கு கம்ப்யூட்டரில் அப்டேட் ஆகிவிட்டது. நீங்கள் ஸ்டேட்மெண்ட் கொடுத்தால்தான் 17/6-ன் படி புதிய பட்டா கிடைக்கும் என்று கூறினார். நான் அவரிடம், நீங்கள் எத்தனை மணி வரை ஆபிஸில் இருப்பீங்கனு என்று கேட்டேன், அதற்கு அவர் சாயந்திரம் வரை இருப்பதாக கூறினார். எனவே மதியம் 03.00 மணியளவில் நான் மதுரை தெற்கு தாலுகா அலுவலகத்திற்கு சென்ற போது சர்வேயர் முத்துப்பாண்டி இல்லாததால் அவரிடம் மீண்டும் போனில் பேசி, அவரிடம் ஸ்டேட்மெண்ட எப்படி எழுதவேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் ஸ்டேட்மெண்ட் எழுதுவதற்கு விபரம் கூறி, தான் தெப்பக்குளம் அருகே இருப்பதாகவும், சற்று நேரத்தில் ஆபிசுக்கு வந்து விடுவதாகவும் கூறினார். எனவே நான் தெற்கு தாலுகா அலுவலகத்திற்கு வெளியே அவருக்காக காத்துக்கொண்டிருந்தேன். பின்னர் மாலை 04.00 மணியளவில் சர்வேயர் முத்துப்பாண்டி மதுரை தெற்கு தாலுகா அலுவலகம் வந்துவிட்டதாக கூறி என்னை போனில் கூப்பிட்டார். வெளியில் காத்திருந்த நான் உடனே தெற்கு தாலுகா அலுவலகத்திற்குள் சென்று திரு.முத்துபாண்டி அவர்களை சந்தித்து, நான் எனது மனைவி பெயரில் நான் எழுதி வைத்திருந்த ஸ்டேட்மெண்ட்டை காண்பித்தேன். முத்துப்பாண்டி ஸ்டேட்மெண்டை படித்து பார்த்து விட்டு, அனுப்புனர், பெறுனர் போட்டு எழுதக்கூடாது

என கூறி, நான் எழுதிய கடிதத்தின் பின்பக்கத்தில் "மதுரை தெற்கு வட்டாட்சியர் அவர்களுக்கு; மதுரை தெற்கு இஸ்மாயில்புரம் இல் குடியிருக்கும் ரமேஷ் மனைவி சுபா ஆகிய நான் சொல்லிக் கொண்ட வாக்குமூலம்" என்று சில வரிகளை மாதிரியாக எழுதி கொடுத்தார். பின்னர் நான் எனது வீட்டிற்கு சென்று அதேபோல் ஸ்டேட்மெண்ட் நான் எழுதி, எனது மனைவி சுபாவை அன்றைய தினமே சுமார் மாலை 4.45 மணியளவில் மதுரை தெற்கு தாலுகா அலுவலகம் கூட்டிவந்து சர்வேயர் முத்துப்பாண்டி அவர்கள் முன்பு எனது மனைவியிடம் நான் எழுதிய ஸ்டேட்மெண்டில் கையெழுத்து பெற்று, ஆதார் எண் மற்றும் போன் நம்பர் எழுதி அதனை சர்வேயர் முத்துப்பாண்டியிடம் கொடுத்தேன். அப்போது முத்துப்பாண்டி, என்னிடம் நான் ஏற்கனவே அலுவலக செலவுக்கு கேட்ட பணம் ஐந்தாயிரம் கொண்டு வந்து இருக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு நான் கொண்டு வரவில்லை என கூறினேன். ஏற்கனவே ஒரு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. நான் கேட்ட ரூ.5,000/- பணம் கொடுக்கவில்லை என்றால் உங்களது மனு Cancel ஆகிவிடும் என்று கண்டிப்பாக கூறிவிட்டார். நான் சரி, ரெடி செய்துவிட்டு கொண்டு வருகின்றேன் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். நான் வீட்டுக்கு வந்து யோசித்துப் பார்த்தேன். அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, எனது மனைவி சுபா பெயரில் பட்டா உட்பிரிவு செய்து, பெயர் மாற்றம் செய்ய ஏற்பாடு செய்து தருவதற்கு என்னிடம் ரூ.5,000/- லஞ்சம் கேட்கும் சர்வேயர் முத்துப்பாண்டி மீது சட்டப் பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் கிரைய ஆவண எண். 4128/2007-ன் நகல், மதுரை தெற்கு வட்டாட்சியர் அவர்களின் நடவடிக்கைகள் ஆர்.டி.ஆர் எண். 1014/2008, நாள் 16.05.2008-ன் நகல், வரைபடம் மற்றும் Town Survey Register-ன் நகல், நான் 17.06.2022-ஆம் தேதியன்று எழுதி கொடுத்த விண்ணப்பம் மற்றும் பட்டா எண். 17/2 என காந்தி மனைவி செல்வி பெயரிலுள்ள Extract from the Town Survey Land Register-ன் நகல், ஆன்லைன் விண்ணப்பம் எண். 2022/0154/24/005429, நாள்: 17.06.2022-ன் நகல், 27.07.2022-ஆம் தேதியன்று என் மனைவி கொடுத்த ஸ்டேட்மெண்ட் நகல், அதே நாளில் நான் எழுதிய ஸ்டேட்மெண்ட் மற்றும் அதன் பின்பக்கத்தில் திரு.முத்துப்பாண்டி எழுதி கொடுத்த மாதிரி ஸ்டேட்மெண்ட்டின் அசல் ஆகியவற்றை இணைத்துள்ளேன். மேலும், சர்வேயர் முத்துப்பாண்டி கேட்ட லஞ்சப் பணம் ரூ.5,000/-ஐயும் கொண்டுவந்துள்ளேன். உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு, Sd/- XXXXX (M.Ramesh) 29.7.22. Sir, Received the written complaint on 29.07.2022 at 08.30 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused were verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti – Corruption, Chennai and I registered a case in Madurai Vigilance and Anti – Corruption in Cr. No.5/2021 u/s 7 of P.C. Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 at 09.00 hrs and took up investigation. Sd/- XXXX (T. SURIYAKALA), Inspr. of Police, V&AC, 29.07.22.

Original FIR, original written complaint of Tr.M.Ramesh, S/o.Muthaiah, along with the documents enclosed by the Complainant is submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of Cases under Prevention of Corruption, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance and Anti – Corruption, Chennai.

(T.Suriyakala)
Inspr. of Police,
V&AC, Madurai
29.07.22